முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமை!

இந்துத்துவ சனாதன சக்திகளின் எண்ணங்கள் மண்ணோடு மண்ணாகும்!

சென்னை – ஜாபர்கான்பேட்டையில் நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் – ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உரை!

சென்னை, பிப்.1– சென்னை, சைதாபேட்டை ஜாபர்கான்பேட்டையில், 25.01.2025 அன்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற வீரவணக்கநாள் பொதுக் கூட்டத்தில் மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் உரையாற்றுகையில், "இந்துத்துவ சனாதன சக்திகளின் எண்ணங்கள் மண்ணோடு மண்ணாகும்" என குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் வைகோ அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

கதிர் வெடித்துபூ பிளம்பு விழ
கடல் குதித்துச் சூடாற்ற
முழுமைமிகு நிலப்பரப்பின்
முதற்பரப்பு தோன்றிவிட
நதிவருமுன் மணல்தருமுன்
முன்தோன்றி மூத்த தமிழுக்கு
என் தலைவணக்கம்.

சென்னை மாநகரில், ஜாபர் கான்பேட்டையில் இதே இடத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு நிற்க, நாங்கள் ஏன் தேர்தலில் போட்டியிடவில்லை? என இரண்டேகால் மணி நேரம் உரையாற்றிச் சென்ற நிகழ்ச்சி என் நெஞ்சில் நிழலாடுகிறது.

ஜனவரி 25, மொழிப்போர்த் தியாகிகள் நினைவு நாள். ஆதிக்க இந்தியை எதிர்த்து நீதிக்குப் போராடி மாண்டவர்களுக்கு எமது அஞ்சலி.

அறிஞர் அண்ணாவின் பாராட்டு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில், ஆருயிர் சகோதரர் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

1967 இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்ட சைதாபேட்டை தொகுதியில் நான் பேசுகிறேன் என்று கூறிய மாத்திரத்தில், இந்தக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு அரும்பாடுபட்ட என்னுடைய உயிர் சகோதரர் சுப்பிரமணி அவர்களைப் போன்ற வீராதி வீரர்கள் தமிழ் நாட்டில் ஊருக்கு ஊர் இருக்கிறார்கள். தங்களுக்கு என்ன கிடைக்கும் என்று நினைக்காமல், இந்த இயக்கத்திற்காகப் பணியாற்றுகின்ற தோழர்களின் உழைப்பில் இந்த இயக்கம் வளர்ந்துகொண்டிருக்கிறது.

61 ஆண்டுகளுக்கு முன்னர், 1964 ஆகஸ்டு 21 ஆம் நாள் கோகலே ஹாலில் இந்தி எதிர்ப்புக் கருத்தரங்கம் நடைபெற்றபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவுரை ஆற்றுவதற்காக வந்திருந்தார்கள். அண்ணா அவர்கள் முன்னிலையில் அன்று நான் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றேன். அன்று இரவு அண்ணா அவர்களின் நுங்கம்பாக்கம் வீட்டிற்கு எல். கணேசன், விருதுநகர் சீனிவாசன் ஆகியோர் என்னை அழைத்துச் சென்றபோது, "நன்றாகப் பேசினாய்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டியதை என்னால் மறக்க முடியாது.

எனது பொது வாழ்வில் 64 ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அதற்கு முன்னரே திராவிட இயக்கத்தின் மாணவர் இயக்கத்தில் பணியாற்றி இருந்தாலும், அண்ணாவுக்கு முன்பாகப் பேசி 64 ஆண்டுகள் ஆகின்றன.

இந்துத்துவ சனாதன சக்திகள்!

தமிழக அரசியல் பரபரப்பான சூழ்நிலையில் போய்க் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய திராவிட இயக்கத்தின் ஆணிவேரையே அசைத்துப் பார்ப்பது என்று நாலா திசைகளிலிருந்தும் நம்மைத் தாக்குவதற்கு இந்துத்துவ சனாதன சக்திகள் முயற்சித்துக் கொண்டு இருக்கிறார் கள். அவர்களது எண்ணங்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாகும், தவிடுபொடியாகும். இது தியாகிகளின் கோட்டை, இரத்தம் சிந்தி உயிர்களைத் தந்து திராவிட இயக்கத்தை வீறுகொண்ட தோழர்கள் பாதுகாத்துத் தந்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது, இதே சைதையில் பல கூட்டங்களில் உரையாற்றியிருக்கிறேன்.

இந்துத்துவா சக்திகள் இந்தியாவில் உள்ள அனைத்தையும் ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும் என்று மூர்க்கத்தனமாக தாக்குதல் தொடுத்து வருகின்றன. அவர்கள் தமிழ்நாட்டைக் குறி வைப்பதற்கான காரணம், அவர்களால் தமிழகத்திற்குள் அடியெடுத்து வைக்க முடியவில்லை என்பதுதான். ஆணிவேரையே அறுத்துவிட்டால், அந்த விருட்சம் சாய்ந்துவிடும் என்ற எண்ணத்தில்தான் அறிவாசான் தந்தை பெரியார் அவர்களை இழித்தும் பழித்தும், இட்டுக் கட்டியும், பொய்யுரைத்தும் புரட்டுத்தன மாக அவரைப் பற்றி தவறாக சித்தரிக்கின்றார்கள்.

அஞ்சாத சிங்கம் தந்தை பெரியார்!

தந்தை பெரியார் பல பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அப்போது வடநாட்டில் நடைபெறுகின்ற மாநாடுகளுக்கு தந்தை பெரியார் அவர்கள் செல்வார்கள். அப்படி 1923 இல் கான்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், "இந்த நாட்டில் எல்லோரும் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும். கட்டாயம் இந்தியில்தான் பேச வேண்டும்" என்று மகாத்மா காந்தி கூறினார். தந்தை பெரியார் அவர்கள் சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, மேடையின் முன்பாக நின்று "இந்தியை ஒரு போதும் இந்தியா ஏற்றுக்கொள்ளாது. எங்கள் தென்னாடு ஏற்றுக்கொள்ளாது. திராவிட பூமி ஏற்றுக் கொள்ளாது. தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது. இந்த எண்ணத்தை காந்தியார் மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று நேருக்கு நேராக அஞ்சாத சிங்கமாகக் கூறினார்.

கான்பூர் மாநாட்டில் கண்டித்துப் பேசிய தந்தை பெரியார், 'குடிஅரசு' இதழில், "இந்தியின் சூழ்ச்சி; ஆரியப் புரட்டு" என்று கடிதம் எழுதினார். அறிக்கை வெளியிட்டார். மே மாதம் நான்கு வாரங்களும் 'குடிஅரசு' இதழில் இதை மையமாக வைத்து எழுதினார்.

1924 இல் காக்கிநாடா மாநாட்டிலும் மீண்டும் அதே கருத்து கூறப்பட்டதால், 1925 இல் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேறினார். அவர் காங்கிரஸை விட்டு வெளியேறுவதற்குக் கூறிய காரணங்களில் ஒன்று இந்தித் திணிப்பு.

1937 இல், மலைக்கோட்டை மாநகராம் திருச்சிக்கு அருகில் தமிழர் மாநாடு நடைபெற்றது. தந்தை பெரியார் அவர்கள் உரையாற்றும்போது, "இனி மேல் தமிழ்நாடு, தமிழருக்கே!" என்று கூறினார். இது நேற்றைக்கோ, முந்தைய நாளோ பேசியது அல்ல, அன்றே முழக்கமிட்ட தலைவரை கொச்சைப் படுத்த முடியாது.

தந்தை பெரியார், ஒரு மாணவன் சென்றாலும் எழுந்து நின்று கை கொடுத்து வரவேற்கக்கூடிய பண்பாடு நிறைந்த தலைவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரை திருப்பூரில் சந்தித்து, "நான் அரசியலில் பணியாற்ற விரும்புகிறேன்" என்று கூறிய போது, "அப்படியானால் நீ என்னோடு வந்துவிடு" என்று அண்ணாவைச் சேர்த்துக் கொண்டார். பெரியாரின் தலைமை மாணாக்கராக அறிஞர் அண்ணா திகழ்ந்தார்.

இந்தித் திணிப்பு கர்ஜித்த பெரியார்!

1938-இல் இந்தியைத் திணிக்கின்ற நிலை வந்தபோது, இந்தித் திணிப்பை அழித்தே தீருவேன் என்று பெரியார் கர்ஜனை செய்த காரணத்தால், நீதிமன்றக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். அவர் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. என்ன பதில் சொல்ல விரும்புகிறீர்கள்? என்று நீதிபதி கேட்டார். "நீங்கள் என்னை தண்டிப்பது என்ற நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள். உங்கள் நோக்கம் நிறைவேறட்டும். அதிகபட்சம் எத்தனை ஆண்டுகள் தண்டனை கொடுக்க முடியுமோ? அந்தத் தண்டனையை எனக்குக் கொடுங்கள். வசதிகளற்ற எவ்வளவு மோசமான சிறைச்சாலை இருக்கிறதோ, அந்த சிறைச்சாலைக்கு என்னை அனுப்புங்கள்" என்று நீதிபதியிடம் கூறினார். மூன்று வருடம் சிறை தண்டனை விதிக்கப்பட்டவுடன், சால்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு வெளியே வந்தார் தந்தை பெரியார். எல்லோரும் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தார்கள். "ஏன் அழுகிறீர்கள்? மூன்று வருடம்; மூன்று வருடம்; மூன்று வருடம் எனக்கு சிறை" என நீதிமன்ற வாசலில் நின்றவாறு அவர் முழக்கமிட்டார்.

அவரை சென்னையிலிருந்து பெல்லாரி சிறைக்கு மாற்றினார்கள். பெல்லாரி காலச் சூழ்நிலை அவரது உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. உடல்நலம் பெரிதும் பாழ்பட்டது.

பெரியார் அவர்கள் அழைத்த போராட்டத்தில் கலந்து கொண்ட நடராசன் 1938 ஜனவரி 12 ஆம் நாள் இறந்துபோனார். சில நாட்கள் கழித்து அதே சிறையில் தாளமுத்து மார்ச் 15 ஆம் தேதி இறந்துபோனார். இவர்கள் இருவரின் கல்லறைகளும் மூலக்கொத்தளத்தில் இருக்கின்றன.

தாளமுத்து – நடராசனுக்கு மணிமண்டபம்!

பிற மாநிலங்கள் எல்லாம் பின்பற்றுகின்ற வகையில் நல்லாட்சி நடத்தி வருகின்ற தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் உரிமைகளைக் காப்பது மட்டுமின்றி, திராவிட இயக்கக் கொள்கைகளையும் காப்பாற்றி வருகிறார். அப்படி திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற என்னுயிர் சகோதரர் தளபதி ஸ்டாலின் அவர்கள் தாளமுத்து நடராசன் ஆகியோருக்கு மணிமண்டபம் எழுப்பி, அதனை இன்றைக்குத் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்களுக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டவாதிகளின் சார்பிலும், தமிழ்ப் பெருமக்கள் சார்பிலும் நான் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரங்கநாதன் நினைவிடத்தில் மலர் வளையம்!

இங்கு பொதுக்கூட்டத்திற்கு வருகிற வழியில், அரங்கநாதன் கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்துவிட்டு வந்தேன். திராவிட இயக்கத்தை எழுதில் வீழ்த்திவிட முடியாது. திராவிட இயக்கம் இரத்தத்தாலும், கண்ணீராலும் அடித்தளம் அமைத்து வளர்க்கப்பட்ட இயக்கம். சிவலிங்கம், சின்னச்சாமி, அரங்கநாதன், ஆசிரியர் வீரப்பன், கீரனூர் முத்து, விராலிமலை சண்முகம், மாயவரம் சாரங்கபாணி, பீளமேடு தண்டபாணி அவர்கள் அத்தனை பேரும் தீக்குளித்தும், நஞ்சு அருந்தியும் இறந்துபோனார்கள். அவர்களது படங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தங்களது குடும்பங்களை நினைத்தார்களா? தங்களது பிள்ளைகளை நினைத்தார்களா?

பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்க வேண்டும் என்று 1929 இல் செங்கல்பட்டு மாநாட்டில் தந்தை பெரியார் தீர்மானம் நிறைவேற்றினார். இந்திய உபகண்டத்தில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இப்படி தீர்மானம் நிறைவேற்றிய ஒரு இயக்கம், பெரியாரின் சுயமரியாதை இயக்கம்.

யுனெஸ்கோ அமைப்பின் பட்டயம்!

வரும் காலத்தில் பெண்கள் முன்னேறி விடுவார்கள் என்று தந்தை பெரியார் பெண்ணுரிமை பேசினார். அவர் ஆண்டவனுக்கு விரோதி அல்ல, கடவுள் நம்பிக்கையின் பேரில் செய்யப்படுகின்ற மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்தார். அதனால்தான் ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பு,

"புது யுகத்தின் தீர்க்கதரிசி சமுதாய சீர்திருத்தத்தின் தந்தை அறியாமைக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் நேர் எதிரானவர்" என்று பட்டயம் கொடுத்தது.

அப்படிப்பட்ட தந்தை பெரியார், பச்சைத் தமிழர் என்று காமராஜரைத்தான் கடைசி வரை ஆதரித்தார். ஒரு முடிவெடுத்தால் அதில் உறுதியாக இருப்பார். ஆனால், காமராஜர் அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது, வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவரது உயிர் பிரிந்தது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் பெரியாரைப் போற்றினார்; பாராட்டினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கவிதைகளாகவே எழுதித் தீட்டினார். திராவிட இயக்கம் தந்தை பெரியாருக்கு கடன்பட்டிருக்கிறது.

பெரியார் இல்லையென்றால் நாம் ஏது?

திராவிடம் என்பது 'த்ராவிடம்', 'திருவிளம்' என்ற சொல்லில் இருந்து வந்தது என்று மேல்நாட்டு அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். தமிழ் இந்தத் திராவிடத்திலிருந்துதான் வந்தது என்று கூறினார்கள். இதை மறுத்து வாதம் செய்பவர்கள் வாதம் செய்யலாம். கருத்துக்கு கருத்தை மோதவிடலாம். பேச்சுக்கு பேச்சை பதிலாகச் சொல்லலாம். ஆனால் இழித்துப் பேசுவது, பழித்துப் பேசுவது பெரியாரின் வாழ்க்கையில் நடக்காத ஒழுக்கக் கேடுகளை மறைமுகமாகக் குறிப்பிட்டுப் பேசுவது நியாயம்தானா?

நான் இந்த மக்கள் முன்பாக நின்று சொல்கிறேன், தமிழ் நாட்டு வீதியில் நின்று சொல்கிறேன், சைதாபேட்டையில் இருக்கின்ற மக்களின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், பெரியார் இல்லை என்றால் நான் ஏது? நீ ஏது? நாம் ஏது? அந்தப் பெரியார் தனது சொத்துகளையும் சேர்த்து அறக்கட்டளை மூலமாக பொதுச் சொத்தாக்கினார்.

அப்படிப்பட்ட தந்தை பெரியாரைப் பற்றி இப்போது இழிவாகப் பேச வேண்டிய அவசியம் ஏன் வந்தது? இவர்கள்தான் தமிழர்கள். இவர்கள் தமிழர்கள் அல்ல என்று பிரித்துப் பார்ப்பதற்கு நீ யார்? தந்தை பெரியார் தமிழ்நாட்டுக்காக உழைத்தவர் மட்டுமல்ல, தமிழ் நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை முன்வைத்தவர்.

வடக்கே இருந்து வந்த உனக்கு எஜமானித்துவமா? டெல்லிக்கும் எங்களுக்கும் என்னடா உறவு? உணவுப் பழக்கத்திலா? நாகரிகத்திலா? பண்பாட்டிலா? எதிலடா உங்களுக்கும் எங்களுக்கும் உறவு? ரகளை செய்ய வேண்டாம். மரியாதையாகப் போய் விடுங்கள் என்று தந்தை பெரியார் அவர்கள் தான் மறைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு சென்னை மாநகர், தியாகராய நகரில் உரையாற்றினார்கள்.

தந்தைப் பெரியாரைப் பற்றி அதிகமான இளைஞர்கள் படிக்கின்றார்கள். இந்தியாவில், வடநாட்டில் தந்தை பெரியாரைப் பெரிதும் போற்றுகிறார்கள்.

1967-இல் அண்ணா முதலமைச்சரானவுடன், நேரடியாக திருச்சிக்குச் சென்று, தந்தை பெரியாரைச் சந்தித்து, உங்கள் ஆசி பெற வந்திருக்கிறேன் என்றார். முத்தமிழறிஞர் கலைஞரும், டாக்டர் நாவலரும், அண்ணன் அன்பில் தர்மலிங்கமும் உடன் சென்றிருந்தார்கள். உங்கள் முகத்தைப் பார்ப்பதற்கு எனக்கு மிகவும் வெட்கமாகவும், கூச்சமாகவும் இருக்கிறது என்று தந்தை பெரியார் கூறியிருக்கிறார்.

சுயமரியாதைத் திருமணம் சட்டமாக வேண்டும் என்ற மசோதாவை அண்ணன் வீரமணி அவர்கள் தந்தை பெரியாரிடம் காட்டியபோது, எல்லாம் சரி, தாலி கட்டினால் என்று ஒரு வார்த்தையைச் சேர்த்திருக்கிறார்களே, தாலி கட்டாமல் வெறும் மாலை மாற்றிக் கொண்டாலே அது சுயமரியாதை திருமணம் தானே? இதை ஏன் நீங்கள் கவனிக்கவில்லை என்றவுடன், நான் எம்.ஏ., பி.எல். படித்திருக்கிறேன். சட்டத்துறை செயலாளர், சட்டம் படித்திருக்கிறார். எங்கள் இருவருக்கும் இது தோன்றவில்லை. அண்ணாவிடம் எடுத்துச் சொல் கிறோம் என்று சென்றார்கள்.

அண்ணா அவர்கள், வீரமணி நீங்கள் எம்.ஏ., பி.எல். படித்தவர். நமது சட்டத்துறைச் செயலாளர் சட்டத்தில் கரைகண்டவர். உங்களால் கண்டுபிடிக்க முடிய வில்லையே! ஐயா பெரியார் கண்டுபிடித்துவிட்டார் என்றார். சுயமரியாதை திருமணச் சட்டத்தை நிறைவேற்றியவர் அண்ணா.

இந்திக்கு இங்கு இடம் இல்லை. தமிழும், ஆங்கிலமும் தான் என்று சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியவர் அண்ணா.

அண்ணா செய்த 3 காரியங்கள்!

கலைவாணர் சிலையைத் திறந்து வைத்தபோது, தமிழ் நாடு அரங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில், "தம்பிமார்களே நீண்ட நாட்களாக உங்களைப் பார்க்க ஆசைப்பட்டுக்கொண்டு இருந்தேன். இன்றைக்கு உங்களைப் பார்க்கிறேன். நான் செய்த மூன்று காரியங்களை இனி யாராலும் மாற்ற முடியாது.

1. சுயமரியாதை திருமணச் சட்டம். இதை எந்த அரசாங்கத்தாலும் மாற்ற முடியாது.

2. இந்தித் திணிப்புக்கு இங்கு இடம் இல்லை. தமிழும், ஆங்கிலமும் ஆட்சி மொழிகள். இதற்கும் மாற்று கொண்டு வர முடியாது.

3. நம் தாயகத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டினோம்"

என்று உரையாற்றினார். அந்தக் கூட்டத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவர்களில் நானும் ஒருவன்.

திராவிட இயக்கத்தைக் காப்பது என்பது தி.மு.க.வை காப்பது!

திராவிட இயக்கத்தைக் காக்க பல இலட்சம் குடும்பங்கள் தாலி அறுத்திருக்கின்றன. பல இலட்சம் தொண்டர்கள் தங்கள் சொத்துக்களை இழந்திருக்கிறார்கள். உயிர்களை இழந்திருக்கிறார்கள். திராவிட இயக்கத்தை அழிப்பது என்பது அவ்வளவு எளிதா? எங்களது இரத்தம், சதை, மூச்சுக் காற்று திராவிட இயக்கத்தோடு கலந்தது; திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கலந்தது. அதனால்தான் நான் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்தபோது, "மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒரு படை இருக்கிறது. எங்களிடம் பெரிய வாக்கு வங்கி இல்லை. ஆனால் என்னோடு இருக்கின்ற படை ஸ்பார்ட்டா வீரர்களைப் போன்ற உறுதியான படை. எங்களை வலிமையை தி.மு.க.வோடு இணைந்து பயன்படுத்துவோம். தி.மு.க.வை அழிக்க நினைப்பவர்கள் எங்களைத் தாண்டித்தான் அவர்களிடம் செல்ல வேண்டும். அந்த அளவுக்கு நாங்கள் இருப்போம்" என்று தெரிவித்தேன். அதில் உறுதியாக இருக்கிறேன்.

திராவிட இயக்கத்தைக் காப்பது என்பது தி.மு.கழகத்தைக் காப்பது. தளபதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியைக் காப்பது. அந்த ஆட்சி மீண்டும் வருவதற்கு மக்களிடம் செல்வது என்ற உணர்வோடுதான் நானும், திருத்தணி முதல் கன்னியாகுமரி வரை இருக்கின்ற மறுமலர்ச்சி தி.மு.க. தொண்டர்களும் இருக்கிறோம். நாங்கள் ஒரு முடிவு எடுத்தால் அதில் உறுதியாக இருப்போம்.

நான் 25 முறை சிறை சென்றிருக்கிறேன். 22 முறை தி.மு.க.வில் சிறை சென்றிருக்கிறேன். தி.மு.க. தொண்டனாக சிறை சென்றிருக்கிறேன். மிசா கைதியாக சேலம் சிறையிலும், பாளையங்கோட்டை சிறையிலும் ஓராண்டு இருந்திருக்கிறேன். பொடா கைதியாக வேலூர் சிறையில் 19 மாதம் இருந்திருக்கிறேன். சாதாரண கைதியைப் போல மொத்தத்தில் ஆறரை வருடம் நான் சிறைச்சாலையில் இருந்திருக்கிறேன். எதையும் நான் எதிர்பார்க்கவில்லை.

இப்படித்தான் திராவிட இயக்கத்திற்காக என் வாழ்நாளின் பெரும் பகுதியை கழித்திருக்கிறேன்.

வரலாறு காணாத இரத்தம் பொங்கிய மொழிப்புரட்சி தமிழகத்தில் வெடித்தது. இலட்சக் கணக்கான மாணவர்கள், மாணவிகள் தமிழகமெங்கும் குண்டாந்தடிகளுக்கும், துப்பாக்கிகளுக்கும் அஞ்சாமல் கிளர்ந்து எழுந்தனர். ஆரணியில், பொள்ளாச்சியில், திருச்செங்கோட்டில், திருப்பூரில், மணப்பாறையில் இந்திய இராணுவமே துப்பாக்கிச் சூடு நடத்தியது. எண்ணற்ற மாணவர்களும், இளைஞர்களும் கொல்லப்பட்டார்கள். பிணங்களின் எண்ணிக்கை தெரியக்கூடாது என்பதற்காக மாணவக் கண்மணிகளின் உடல்களை மதுக்கரைக் காடுகளில் கொண்டுபோய் எரித்தார்கள்.

பாதுகாப்புச் சட்டத்தில் கலைஞர் கைது!

இந்தப் புரட்சிக்குக் காரணமே முத்தமிழறிஞர் கலைஞர் தான் என்று பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, காவல்துறை வேனில் ஏற்றி இரவோடு இரவாக மதுரை கொண்டு போய் சேர்த்து, மதுரை சிறையில் சிறிது நேரம் வைத்திருந்துவிட்டு, கலைஞர் நெஞ்சு வலிக்க வலிக்க ஈவு இரக்கமின்றி பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் கொண்டுபோய் அடைத்தார்கள்.

ஆயிரமாயிரம் கழக இளைஞர்கள் காராக்கிரகத்தில் சிறை வைக்கப்பட்டனர். பேரறிஞர் அண்ணா அவர்கள் பாளையங்கோட்டைக்குச் சென்று தனிமைச் சிறையில் இருந்த கலைஞர் அவர்களைச் சந்தித்தார். அப்பொழுதுகூட அவர் குடும்பத்தைப் பற்றி எதுவும் பேசாமல், தருமபுரி இடைத்தேர்தலில் நமது பணிகள் எப்படி இருக்கின்றன? என்று அறிஞர் அண்ணாவிடம் வினவினார்.

பாளைச் சிறையில் இந்தச் சந்திப்பு முடிந்தபின் அறிஞர் அண்ணா அவர்கள், இந்தச் சிறையில் தன்னை வெல்வான்; தரணியை வெல்வான் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. தன்னை வென்றவர்தான் தம்பி கருணாநிதி. இனி இந்தச் சிறைச்சாலை தமிழர்களின் தவச்சாலையாகும் என்று போற்றினார்.

தளபதியை ஆதரிப்பது தமிழர்களின் கடமை!

தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டைக் காப்பாற்றினார். மொழியைக் காப்பாற்றினார். பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கான சமூக நீதியைக் காப்பாற்றினார். ஏழை எளியவர்கள் மீது இரக்கம் கொண்டு, கை ரிக் ஷா ஓட்டியவர்களுக்கு சைக்கிள் ரிக் ஷா கொடுத்தார். எம்.ஜி.ஆர். அவர்கள் மழை கோட்கள் கொடுத்தார். கண் பார்வை இழந்தவர்களுக்கான முகாம்களை ஏற்படுத்திக் கொடுத்தார் கலைஞர். தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் அவர் வாழ்ந்தார். இன்றைக்கு அவரது அருமைத் திருமகன் ஸ்டாலின் அவர்கள் தாய்மார்களுக்கென்றே சட்டங்கள் கொண்டுவந்திருக்கிறார், நிதி ஒதுக்குகிறார். விவசாயிகள் கண்ணீரைத் துடைக்கிறார். நெசவாளர்கள் துயரைப் போக்குகிறார். பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகிறார். இதுவரை இல்லாத அளவுக்கு வெளிநாடு முதலீடுகளைக் கொண்டு வந்து சேர்க்கிறார்.

நம்முடைய முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களை ஆதரிக்க வேண்டியது தமிழனாகப் பிறந்த ஒவ்வொரு தமிழன், தமிழச்சியின் கடமை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய நாட்டை இனி யாரும் இந்தியா என்று அழைக்கக் கூடாது. பாரத் என்றுதான் அழைக்க வேண்டும். டெல்லி இனி தலைநகர் அல்ல, வாரணாசிதான் இனி நமக்குத் தலைநகர். இந்த நாட்டில் உள்ள முஸ்லிகம்கள், கிறித்துவர்களுக்கு ஓட்டுரிமை கிடையாது என்று தெரிவித்துவிட்டு, இதைச் செய்து முடிக்க நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படித்தான் ஒரே நாடு; ஒரே தேர்தல் என்று கூறுகிறார்கள்.

நான் கேட்கிறேன், இங்கே ஒரு மொழி இருக்கிறதா? இந்தி பேசுகிறவர்கள் எத்தனை ஆயிரம்பேர் இருக்கிறார்கள்? மூத்த மொழி உயர்தனிச் செம்மொழி. எங்கள் தமிழ்மொழி அரசியலமைப்புச் சட்ட மொழியாகாவிட்டால் நாங்கள் ஏன் இந்த நாட்டின் குடிமக்களாக இருக்க வேண்டும்? என்று நாடாளுமன்றத்தில் கேட்டேன்.

தந்தை பெரியாரை நான் என் நெஞ்சில் வைத்துப் பூஜிக்கிறேன். என் நண்பன் வாசு சொக்கன் திருமணத்தில் நான் பெரியார் முன்பு உரையாற்றினேன். நெல்லை தேரடி மைதானத்தில் பெரியாரின் முன்பு உரையாற்றினேன். என்னை தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்.

நாக்கு அழுகிப் போகும்!

தந்தை பெரியார் அவர்களை இழிவுபடுத்த நினைப்பது எங்கள் நெஞ்சில் ஆழமாக ஈட்டியைச் சொருகுகின்ற வேலை. இதன் விளைவுகள் மோசமானதாகும். தந்தை பெரியார் ஓட்டு வாங்கச் சென்றாரா? அவர் மனதுக்கு சரி என்று பட்டதைப் பேசினார்.

காமராஜரை ஆதரித்தார். முத்தமிழறிஞர் கலைஞரை ஆதரிக்க வேண்டும் என்று முடிவெடுத்து, கடைசி வரை ஆதரித்தார். கலைஞர் அவர்களும் பெரியாருக்கு அனைத்து சிறப்புகளையும் செய்தார்கள்.

இன்றைக்கு தாளமுத்து, நடராசனைப் பற்றிப் பேசுகிறோம். அவர்களது உள்ளத்தில் எல்லாம் உணர்ச்சியை வளர்த்தவர் பெரியார். மூட நம்பிக்கைகளின் பரம வைரி. கடவுள் பெயரால் மூட நம்பிக்கைகளை வளர்க்காதே என்றார். அதனால் அதில் வேகமாக இருந்தார். உனக்கு முடிந்தால் இரு, இல்லை என்றால் விட்டுவிடு.

ஒரு முறை அவர் வண்டியில் சென்றுகொண்டிருந்தபோது செருப்பு வந்து அவர் மீது விழுந்தது. வண்டி ஓட்டியவரிடம், ஜட்காவை கொஞ்சம் திருப்பு, ஒரு செருப்புதான் வந்திருக்கிறது. மற்றொரு செருப்பையும் அவன் வைத்திருப்பான். அதைத் திரும்ப எறியட்டும். நமக்கு இரண்டு செருப்பு கிடைத்துவிடும். அப்படி சென்றபோது மற்றொரு செருப்பையும் வீசினார்கள். அதை பெரியார் எடுத்துக் கொண்டு சென்றார். அப்படிப்பட்ட புண்ணிய வான் பெரியார். பெரியாரைப் பற்றி இழிவாகப் பேசுகிறவர்களின் நாக்கு அழுகிப் போய்விடும். மீண்டும் சொல்கிறேன், நாக்கு அழுகிப் போகும்.

பெரியாரால்தான் நாங்கள். பெரியாரால்தான் திராவிட இயக்கம். பெரியாரால்தான் திமுக. பெரியாரால்தான் நம்முடைய முதல்வர் தளபதி ஸ்டாலின் தமிழ்நாட்டை வலுவாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

வாழ்க தந்தை பெரியாரின் புகழ்! வாழ்க பேரறிஞர் அண்ணா புகழ்! வாழ்க முத்தமிழறிஞர் கலைஞர் புகழ்! வெல்க தளபதி ஸ்டாலின் ஆட்சி!

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உரையாற்றினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோவை மு.தமீம்

பிப்ரவரி 1 (2022)

இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளைப் பரப்பியவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்டப் பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1984ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.

1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ந. மணிமொழியன்

பிப்ரவரி 1 (1991)

பள்ளிப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

நாமக்கல் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை பொறுப்பு வகித்தவர்

தலைமைக் கழகச் சொற்பொழிவாளராகப் பணியாற்றி கழகத்தின் கொள்கைகளை மாநிலம் முழுவதும் பரப்பியவர்.

நாமக்கல் நகர கூட்டுறவு வங்கித் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

'மணிமொழியனிடம் மணி(பணம்) குறைவாக இருந்தாலும், நல்ல மொழி உள்ளது' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவ